

தஞ்சாவூர் மாவட்டம் மூர்த்தி கலையரங்க கூட்டரங்கில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் அரசு தலைமை கொறடா முனைவர்.கோவி.செழியன் முன்னிலையில் தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், மயிலாடுதுறை. புதுக்கோட்டை மற்றும் அறந்தாங்கி ஆகிய டெல்டா மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்ட சுகாதார அலுவலர்கள், இணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் மற்றும் அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர்களுடன் ஆய்வுக் கூட்டம் நேற்று முன்தினம் (03.09.2024) நடைபெற்றது. சட்டமன்ற உறுப்பினர்கள் க.அன்பழகன் (கும்பகோணம்), எம்.எச்.ஜவாஹிருல்லா (பாபநாசம்), பூண்டி.கே.கலைவாணன் (திருவாரூர்), மருத்துவ நலப்பணிகள் இயக்குநர் மரு ஜெய. ராஜ மூர்த்தி, பொது சுகாதரம் நோய்த் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.ச.செல்வ விநாயகம், மருத்துவ கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்கம் இயக்குநர் மரு.சங்குமணி மற்றும் பலர் உடன் உள்ளனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி மரக்காணத்தில்நடைபெற்ற மரக்காணம் பேரூர் தி.மு.க. செயல் வீரர்கள் கூட்டத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சிமஸ்தான் சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சீத்தாபதி சொக்கலிங்கம், மாவட்டப் பொருளாளர் ரமணன், ஒன்றிய பெருந்தலைவர் தயாளன், துணை சேர்மன் பழனி, நகர செயலாளர் மரக்காணம் ரவிக்குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### சென்னை முப்பெரும் விழாவில் புதுக்கோட்டை தெற்கு

# மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்போம்!

## மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்: அமைச்சர் எஸ்.ரகுபதி அறிவிப்பு!

புதுக்கோட்டை, செப். 5 -

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக ஆலோசனை கூட்டம் காணொளி காட்சி வாயிலாக மாவட்ட அவை தலைவர் அ. சுப்பிரமணியன் தலைமையில் 3.9.2024 செவ்வாய்க்கிழமை இரவு 7 மணியளவில் நடைபெற்றது. இதில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும் சட்டத்துறை அமைச்சரு



மான எஸ்.ரகுபதி ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றியச் செயலாளர் கலந்துகொண்டனர். கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு துணை முதல்வர் பொறுப்பு வழங்க வேண்டும் என்று ஒரு மனதாக தீர்மானம் நிறை வேற்றப் பட்டது.

மேலும் சென்னையில் நடைபெறும் முப்பெரும் விழாவில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகத்தினர் திரளாக பங்கேற்பதென்றும் தீர்மானம் நிறை வேற்றப்பட்டதாக மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்துள்ளார்.

### நாமக்கல் மேற்கு மாவட்டம் பரமத்தி, கபிலர்மலை

# மோகனூர் ஒன்றியங்களில் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## எஸ்.எம்.மதுரா செந்தில் – ரேகா பிரியதர்ஷினி பங்கேற்பு!

நாமக்கல், செப். 5 -

நாமக்கல் மேற்கு மாவட்டம் பரமத்தி வேலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பரமத்தி வேலூர், கபிலர்மலை மோகனூர் மேற்கு ஆகிய ஒன்றியங்களிலும், பரமத்தி, வேலூர், வெங்கரை, பாண்டமங்கலம், பொத்தனூர் ஆகிய பேரூர்களிலும் ஒன்றிய, பேரூர் கழகம் சார்பில் பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

பரமத்தி ஒன்றியம் நடந்தை மகளிர் சுய உதவிக் குழு கூடத்தில் பொது உறுப்பினர்கள் கூட்டம் ஒன்றிய கழக செயலாளர் பி.பி.தனராஜ் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட துணை செயலாளர் அன்பழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ரங்கசாமி, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் பிரேமா வேலுசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக சேலம் முன்னாள் மேயரும், ஆதி திராவிடர் நல வாரிய உறுப்பினருமான ரேகா பிரியதர்ஷினி கலந்து கொண்டார். கூட்டத்தில் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்.

கூட்டத்தில் சார்பு அணி நிர்வாகிகள் ஆர் பாலாஜி, பூக்கடை டி சுந்தர் மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் கழகத் தொண்டர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து கபிலர் மலை ஒன்றிய கழகம் சார்பில் பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் கபிலர்மலை கொங்கு திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு கபிலர்மலை ஒன்றிய செயலாளர் சண்முகம் தலைமை வகித்தார். சேலம் முன்னாள் மேயர் ரேகா பிரியதர்ஷினி முன்னிலை வகித்தார். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட நாமக்கல் மேற்கு மாவட்ட செயலாளர் மதுரா செந்தில் உறுப்பினர்களிடையே பேசிய வரும் உள்ளாட்சித் தேர்தல் மற்றும் சட்டமன்றத் தேர்தலில் எவ்வாறு களப்புணி ஆட்டம் வேண்டும் என்று ஆலோசனை வழங்கினார். மேலும் கட்சி நிர்வாகிகளிடம் அப்பகுதியில் உள்ள குறைகளை கேட்டு அறிந்து அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி அளித்தார்.

மேலும் நிர்வாகிகளிடம் வரும் உள்ளாட்சி மற்றும் சட்டமன்ற தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் அதிக இடங்களில் வெற்றி பெறுவது, அதற்காக நிர்வாகிகள் எவ்வாறு செயல்படுவது குறித்து ஆலோசனைகளை வழங்கினார். தொடர்ந்து பரமத்தி வேலூர் வெங்கரை, பாண்டமங்கலம் போத்தனூர் ஆகிய பேரூர்களிலும் பொது உறுப்பினர்கள் கூட்டம் பேரூர் கழக செயலாளர்கள் முருகன், ராமலிங்கம் ரமேஷ்பாபு, சூர்யா ராம லிங்கம் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

### திருவெண்ணைநல்லூர் கிழக்கு ஒன்றியம்

# அரசூரில் கழக பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## உதயசூரியன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திருவெண்ணைநல்லூர், செப். 5 -

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், உளுந்தூர் பேட்டை சட்டமன்ற தொகுதி,திருவெண்ணெய் நல்லூர் கிழக்கு ஒன்றிய கழகப் பொது உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டம் அரசூரில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது,இந்த கூட்டத்திற்கு கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் ம.சந்திர சேகரன் தலைமை வகித்தார். ஒன்றிய குழு தலைவர் ஓம்சிவசக்திவேல், ஒன்றிய கழக அவைத்தலைவர் கலியவரதன்,மாவட்ட கழக துணைச் செயலாளர் பிரபாவதி தாமோதரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் செல்வராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ, வடக்கு மாவட்ட கழக அவைத்தலைவர், தமிழ்நாடு கால்நடை ஆட்சி மன்ற குழு உறுப்பினர் ஆ.ஜெ.மணிக்கண்ணன் எம்.எல்.ஏ ஆகியோர்கள் கலந்து கொண்டு பல்வேறு கருத்துகளை முன்வைத்து கழக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார்கள்.

மேலும் இக்கூட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவை கிளைகள் தோறும் கொண்டாடுதல், பேரறிஞர் அண்ணாவின் 115வது பிறந்தநாள் விழா,கழகத்தின் 75 ஆம் ஆண்டு பவள விழா, தந்தை பெரியார் 145வது பிறந்தநாள் விழா உள்ளிட்ட விழாக்களை மிகச் சிறப்பான முறையில் கொண்டாடுதல், சென்னையில் நடைபெறும் முப்பெரும் விழாவில் வடக்கு மாவட்ட கழக நிர்வாகிகள் அதிக அளவில் பங்கு பெறுதல், கழக சார்பு அணிகளுக்கு ஒன்றிய அளவில் நிர்வாகிகளை தேர்வு செய்தல், ஒன்றியங்களில் உள்ள அனைத்து கிராமங்களிலும் தெருமுனை பிரசாரக் கூட்டங்கள் நடத்துவது,மகளிர் அணியில் அதிக உறுப்பினர்களை சேர்ப்பதற்கு உதவி செய்தல் உள்ளிட்ட தீர்மானங்கள் பொது உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

இதில் மாவட்ட வழக்கறிஞர் அணி துணை தலைவர் வழக்கறிஞர் கரிகாலன், சுப்ரமணியன், ஒன்றிய குழு உறுப்பினர்கள் ஜெயந்தி சக்திவேல், நாராயணன், பொருளாளர் மைக்கேல், கிருஷ்ணமூர்த்தி, கிராமம் ஸ்ரீதர், சக்கரவர்த்தி மற்றும் திருவெண்ணைநல்லூர் கிழக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் கிளைக் கழக நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



சேலம் மத்திய மாவட்டம் சேலம் வடக்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் மாவட்ட கழக செயலாளர் இரா. இராஜேந்திரன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் ஒன்றிய கழக நிர்வாகிகள். ரெயின் போ நடராஜன், ராமச்சந்திரன். 'பூபதி, ஒன்றிய குழு தலைவர் மலர்க்கொடி ராஜா, விவசாய அணி அமைப்பாளர். ராஜா, பொதுக்குழு உறுப்பினர் ராஜேந்திரன், சௌந்தர்ராஜன், ராஜஸ்வரி. சசிகுமார், விஜயன். கார்த்திகேயன், போதம்மாள், கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### சேலம் கிழக்கு மாவட்டம்

# ஆத்தூர் ஒன்றியக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## எஸ்.ஆர்.சிவலிங்கம் தலைமை! டாக்டர் வே.செழியன் வரவேற்பு!

சேலம், செப். 5 -

சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூர் ஒன்றியம் சார்பில் பொது உறுப்பினர் கூட்டம் துளுவ வேளாளர் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் டாக்டர் வே. செழியன் வரவேற்புரையாற்றினார். கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் மாவட்ட அவைத்தலைவர் முரா. கருணாநிதி, மாவட்ட பொருளாளர் ஆர்.வி.ஸ்ரீராம், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ. ஏ. ஆறுமுகம், பொதுக்குழு உறுப்பினர் சந்திரமோகன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சி. சிவராமன், மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் செல்வமணி, மாவட்ட கவுன்சிலர் நல்லம்மாள், பேரூர் செயலாளர் காங்கமுத்து, ஒன்றிய நிர்வாகிகள் சசிகுமார், சிதம்பரம், வரதராஜன், அரசு, செல்வராஜ், ராஜேந்திரன், சேகர், சந்திரன், சிவாஜி, தங்கராசு, முருகன், கிருஷ்ணமூர்த்தி, ரவி, பூக்கடை ராஜா, ஜோதி, நடராஜ், சோலை, அய்யாகண்ணு, சேட்டு, பெரியசாமி, செந்தில்குமார், பிரபு, சிவக்குமார், சதீஷ்குமார், சக்திவேல், வேலுமணி, ரஜினி, விஜயன், செல்வம், சின்னசாமி, பேச்சாளர் வெங்கடேசன், மோகன்ராஜ், இளங்கோ, முத்துசாமி, கவிதா, சீ. க. பழனி, அன்பழகன், மனோகர், வீராசாமி, சுரேஷ், முத்துசாமி, சதீஷ்குமார், முரளி மனோகரன், ஸ்ரீதர், ராமகோவிந்தன், ஜெயராமன், விமல்சேகர், சங்கர், சமதர்மன், ராஜேந்திரன், ராமலிங்கம், முருகேசன், அன்பழகன், கனகராஜ், குமார், அருள், செல்வராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் பேசிய எஸ். ஆர். சிவலிங்கம், கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் ஆட்சி பொறுப் பேற்று மூன்று ஆண்டுகளில் மக்களுக்கு சிறப்பான என்னற்ற திட்டங்களை நிறைவேற்றி வருகிறார். ஆசிய கண்டமே தமிழ்நாட்டை உற்று கவனித்து வருகிறது அந்த வகையில் யாரும் குறை சொல்லாத ஆட்சி தமிழ்நாட்டில் நடைபெற்று வருகிறது. இதை தாங்கி கொள்ள முடியாமல் அ.தி.மு.க. பழனிசாமி தினந்தோறும் உளறிக் கொண்டிருக்கிறார். வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் ஆத்தூர் தொகுதி 50,000 வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறும் இது உறுதி. சேலம் மாவட்டத்தில் கடந்த சட்டமன்ற தேர்தலின் போது அ.தி.மு.க. மாவட்ட செயலாளர் மக்களிடம் டோக்கன் விநியோகம் செய்து மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றனர்.

ஆனால் இந்த முறை மக்களை ஏமாற்ற முடியாது. கழக அரசின் சாதனைகள் அனைத்து குடும்பங்களும் சென்றடைந்துள்ளது. மேலும் கழக நிர்வாகிகள் கழக அரசின் சாதனைகளை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். தற்போது ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு போதுமான நிதி தர மறுக்கிறது. இருந்தாலும் அதையும் சமாளித்துக் கொண்டு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் பல்வேறு திட்டங்களை நிறை வேற்றிக் கொண்டு வருகிறார். பல்வேறு நாடுகள் தமிழ்நாட்டில் முதலீடு செய்வதற்கு போட்டி போட்டுக் வருகின்றனர். காரணம் தமிழ்நாடு அமைதி பூங்கா இருக்கிறது.

அதேபோல் வருகின்ற செப்டம்பர் 15ஆம் தேதி கழகம் தோன்றி ஆண்டு, பேரறிஞர் அண்ணா பிறந்தாள், தந்தை பெரியார் பிறந்தநாள் மூன்றும் சேர்ந்து கழக முப்பெரும் விழா கொண்டாடப்படுகிறது. எனவே கழக இரு வண்ண கொடியை கிளை கழக செயலாளர்கள், ஊராட்சி செயலாளர்கள் அந்ததந்த பகுதிகளில் கொடியேற்றி சிறப்பாக கொண்டாட வேண்டும். விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விளையாட்டுத் துறையில் பல்வேறு சாதனைகளை செய்து கொண்டு வருகிறார். உதாரணமாக ஆசியாவிலேயே சென்னையில் பார்முலா 4 கார் பந்தயத்தை நடத்தி காட்டி இருக்கிறார்.

அதேபோல் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பள்ளிக்கல்வித் துறையில் எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி பல்வேறு மாநிலங்கள் வியந்து பார்க்கும் அளவிற்கு சாதனைகளை செய்து கொண்டிருக்கிறார். அனைத்து அமைச்சர்கள் தினத்தோறும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றனர். சொல்லிக்கொண்டே போகலாம். நேரம் பத்தாது. மேலும் நாடாளுமன்றத் தேர்தலில் பணியாற்றி நிர்வாகிகளுக்கு நன்றிகளை தெரிவித்தார்.

கூட்டத்தில் காங்கமுத்து நன்றியுரையாற்றினார்.

### திருக்கோவிலூர் தெற்கு,வடக்கு,மேற்கு

# ஒன்றியங்களில் கழக பொது உறுப்பினர்கள் ஆலோசனைக்கூட்டம்!

## வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திருக்கோவிலூர், செப். 5 -

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம், ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதி திருக்கோவிலூர் தெற்கு, வடக்கு, மேற்கு ஆகிய மூன்று ஒன்றியங்களில் சார்பில் கழக பொது உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டம் ஜி. அரியூர், சந்தைப்பேட்டை மற்றும் புறவழி சாலையில் அமைந்துள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த ஆலோசனை கூட்டத்தில் ஒன்றிய கழக அவைத்தலை வர்கள் கண்ணன், தமிழரசன், ந. பொன்னுரங்கம் ஆகியோர்கள் தலைமை தாங்கினார், ஒன்றிய கழக துணைச் செயலாளர்கள் தணிகாசலம்,முருகன் செல்வமணி சுப்பிரமணி, கணேஷ் சந்திரசேகர், சிங்காரவேல், ரவிச்சந்திரன், ராமதாஸ்,ஜோதி ஏழுமலை, ஒன்றிய கழக பொருளாளர்கள் காமராஜ்,இளங்கோவன், ஆகியோர்கள் முன்னிலை வகித்தனர்,ஒன்றிய கழக செயலாளர்கள் ராஜேந்திரன் அய்யனார் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர்கள் ஆலோசனைக் கூட்டத்திற்கு வந்த அனைத்து கழக நிர்வாகிகளையும் வரவேற்றனர்.

இதில் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார், அப்போது அவர் பேசியதாவது கடந்த 3 ஆண்டுகளில் தமிழக முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் செய்த திட்டங்களை பொதுமக்களிடம் கொண்டு சேர்க்க திண்ணை பிரச்சாரம் செய்திட வேண்டும், சென்னையில் நடைபெறும் முப்பெரும் விழாவில் தெற்கு மாவட்ட கழக நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும், கிராமங்கள்தோறும் மகளிர் உறுப்பினர்கள் சேர்க்கை அதிகப்படுத்த வேண்டும்,வருகிற 2026 சட்டமன்றத் தேர்தலில் இரண்டாவது முறையாக மீண்டும் நமது கழக தலைவர், சமூக நீதி காவலர், திராவிட நாயகர் மு.க. ஸ்டாலின் அவர்களை முதலமைச்சராக அரியணையில் அமர வைக்கவும் அவரது எண்ணம் ஈடேறுகின்ற வகையில் 234 தொகுதிகளிலும் தி.மு.க. கூட்டணி அமோக வெற்றி பெறும் அதிலும் நமது கள்ளக் குறிச்சி மாவட்டத்தில் நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் நமது தலைமை கழக அறிவிக்கும் வேட்பாளர்களை வெற்றி பெற செய்யவும் அது மட்டும் இல்லாமல் ரிஷிவந்தியம் தொகுதியில் கடந்த முறை வென்ற வாக்கு வித்தியாசத்தை விட வருகிற சட்டமன்ற தேர்தலில் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய நாம் அனைவரும் ஒன்றிணைந்து கடுமையாக பாடுபட வேண்டும் என்று பேசினார்.

இந்த ஆலோசனை கூட்டத்தில் ராஜவேல், தியாகதுருகம் தாமோதரன், தனம் சக்திவேல், ஜெய்சங்கர், உதயா, சோழ பாண்டியபுரம் சிவா, முத்துவேல், முருகவேல், வினோத் ஏகாம்பரம், பிரகாஷ், ஆறுமுகம், ஜெயபால், மாணிக்கம்,ஏழுமலை , குருமூர்த்தி விநாயகம், சண்முகம், அபிஷேக் ஜெயப்பிரகாஷ், ஐயப்பன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர், விஷ்ணு, சுந்தரம்,வழக்கறிஞர் சிவக்குமார் ஆகியோர் நன்றி கூறினர்.



திருவாரூர் மாவட்ட மருத்துவர் அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு சிறப்பு மருத்துவ முகாமை மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., துவக்கி வைத்தார்.தஞ்சாவூர் துணை மேயர் – மண்டல பொறுப்பாளர் டாக்டர் அஞ்சுகம் பூபதி, ஒன்றிய செயலாளர் ப.பிரகாஷ் உள்ளிட்டோர் பங்கேற்ற இந்த முகாமில் மாவட்ட மருத்துவர் அணித் தலைவர் டாக்டர் வி.ஜே.சரவணன், டாக்டர். முகமது ஆரீப், டாக்டர் டி.டி.எஸ்.திவாகரன், டாக்டர் மலர்க்கொடி, டாக்டர் வீரராகுல், பாலசுந்தரம் உள்ளிட்டோர் உடன் பங்கேற்றனர்.



நாகை மாவட்ட தி.மு.க. மருத்துவ அணி சார்பில் மருத்துவ முகாம் நாகையில் நடைபெற்றது. மருத்துவ முகாமை மாநில மருத்துவர் அணிச் செயலாளரும், ஆயிரம் விளக்கு சட்ட மன்ற உறுப்பினருமான என்.எழிலன், மாநில மருத்துவ அணி துணை செயலாளரும், தஞ்சை மாநகராட்சி துணை மேயருமான அஞ்சுகம்பூபதி ஆகியோர் தொடங்கி வைத்தார்கள். உடன் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன், நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து, நாகூர் நகரக் கழகச் செயலாளர் எம்.ஆர்.செந்தில்குமார், மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் சி.முகுந்தன், துணைஅமைப்பாளர் எஸ்.பால்ராஜ் மற்றும் பலர் உள்ளனர்.